# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302

## நரகம்

**முன்னுரை :**

நரகத்தைப் பற்றி படிக்கும்போது நமக்குப் புத்திக்குத் தெளிவும், துக்கமும், ஏன் கண்ணீருங்கூட வருவதைக் காணலாம். அவிசுவாசிகள் அதாவது கிறிஸ்துவைப் புறக்கணிக்கும் மக்கள் இடுக்கத்திலும் வேதனையிலும் நித்தியகாலமாக வாழும் நரகம், நிச்சயமாகப் பயங்கரமாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. நரகத்தைப் பற்றி போதிக்கிற அல்லது பிரசங்கிக்கிற எவரும் இதனைக் கவலையீனமாகவோ அல்லது சாதாரண ஒரு உண்மையாகவோ, மேலோட்டமாகக் கூறாமல் இதனைக் கருத்துடனும், மிகுந்த மன உருக்கத்துடனும் எடுத்துரைக்க வேண்டும். வேதாகமம் இந்த நரகத்தைப் பற்றி என்ன கூறுகின்றது என்பதைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுவதே இந்தப் பாடத்தின் நோக்கம். தேவன் தாமே நமக்கு இந்தப் பாடத்தை புரிந்துகொள்ளுவதற்குத் தேவையான தெளிந்த புத்தியையும், மனதையும் தருவாராக!

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

இக்காலத்தில் ஆண்டவரின் அன்பைக் குறித்து மிக அதிகமாக அறிவித்து வருகின்றனர். நீதியுள்ள தண்டனையைப் பற்றியும், தவிர்க்கமுடியாத நியாயத்தீர்ப்பு உண்டென்பதையும், தேவகோபத்தைக் குறித்தும், நித்திய நரக ஆக்கினையைக் குறித்தும் பிரசங்கிப்பது மிகவும் அரிதாகிவிட்டது. சத்தியத்தைத் தெளிவாகப் போதிக்கிறோம் என்று கூறும் சபைகள்கூட இதில் தவறிவிட்டன. மனிதன் நரகத்தைப்பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று வேதாகமம் வலியுறுத்துகின்றது என்பதைக் காட்டுவதே இந்தப் பாடத்தின் முக்கிய நோக்கம். இயேசுகிறிஸ்துவானவர் பரலோகத்தைப்பற்றிக் கூறியதைவிட இருமடங்கு அதிகமாக நரகத்தைப்பற்றிக் கூறியுள்ளார். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் மாளும் மக்கள் யாவரும் தங்கள் நித்தியத்தை அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே செலவிட நேரிடும் என்பதை நினைக்கும்போது நாம் அவர்களுக்கு நரகத்தைக் குறித்து எச்சரிப்பது எவ்வளவு முக்கியம்! கிறிஸ்துவினால் நமக்குக் கிட்டும் இவ்வளவு பெரிதான இரட்சிப்பு என்பது நரக தண்டனையிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய விடுதலையையும் குறிக்கும். ''வரப்போகிற கோபாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ள ஓடுங்கள்'' என்று பாவிகளுக்கு எச்சரிப்புக் கொடுக்கத் தவறிய பிரசங்கியே உனக்கு ஐயோ! இந்தப் பாடத்தைப் படிக்கும் உங்களுக்குத் தேவன் தாமே மற்றவர்களின் இரட்சிப்பைக் குறித்த வாஞ்சையையும் பாரத்தையும் தருவாராக!

**பாடம்**

## I. வேதாகமத்தில் நரகத்தைக் குறிக்கும் வார்த்தைகள் :

'நரகம்' என்பதைக் குறிக்க பின்கண்ட நான்கு வார்த்தைகள் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அ. சீயோல்** (Sheol)

'சீயோல்' என்று பழைய ஏற்பாட்டில் உள்ள இந்தச் சொல் புதிய ஏற்பாட்டில் ஹேடிஸ் (Hades) என்று கூறப்பட்டுள்ளது. தமிழில் இது 'பாதாளம்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டு : சங்கீதம் 18:5 – ''பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டது.

சங்கீதம் 116:3 – ''பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது.''

**ஆ. ஹேடிஸ்** (Hades)

'ஹேடிஸ்' என்ற கிரேக்கச்சொல் 'சீயோல்' என்ற பழைய ஏற்பாட்டின் பதத்திற்கு ஒத்த பதமாகப் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழில் இது 'பாதாளம்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டு : மத்தேயு 11:23 – ''வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்.''

வெளி.1:18 – ''. . . நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.''

### இ. டார்டராஸ் (Tartaros)

இந்தப்பதம் ஒரேதரம் மட்டும் புதிய ஏற்பாட்டில் 2 பேதுரு 2:4–ல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

''பாவஞ்செய்த தூதர்களைத் தப்பவிடாமல் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி 'நரகத்திலே' தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து . . .'' இங்கு நரகம் என்பதற்குக் குறிப்பிடப்பட்ட 'டார்டராஸ்' என்ற பதம் சீயோலுமல்ல, ஹேடிஸுமல்ல. அதாவது பாதாளம் அல்ல. இது ஒரு தனிப்பட்ட இடம். இங்குதான் பாவம் செய்த தூதர்கள் சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இருளிலே அமர்ந்து தங்கள் நியாயத்தீர்ப்புக்கென எதிர்நோக்கியுள்ளனர்.

### ஈ. கெஹன்னா (Gehenna)

இந்தப்பதம் 'நரகம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டு : மத்தேயு 10:28 – ''. . . ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.''

லூக்கா 12:5 – ''. . . கொலை செய்தபின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்.''

## II. 'சீயோல்', 'ஹேடிஸ்' என்ற இரண்டு பதங்களும் பழைய, புதிய ஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் :

### 1. 'சீயோல்'

இந்தப்பதம் பழைய ஏற்பாட்டில் கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி 'பாதாளம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

1. சங்கீதம் 16:10, ''என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர் . . .''
2. ஆதியாகமம் 37:35, ''நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன்.''
3. எண்ணாகமம் 16:30, ''இவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக . . .''
4. ஆதியாகமம் 42:38, ''நீங்கள் என் நரைமயிரைச் சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள்.''
5. யோபு 14:13, ''நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து . . .''

<u>குறிப்பு :</u>

இவ்வுலக வாழ்வை மேலோட்டமாகப் பார்க்கிற மக்கள் வாழ்வின் முடிவு மரணம் கல்லறை என்பதை மட்டுமே அறிவார்கள். ஆயினும் பழைய ஏற்பாட்டில் 'சீயோல்' என்ற பதம் மனிதர்கள் மரித்தபின் செல்லக்கூடிய இடமாகக் கூறப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டிலுள்ள 'சீயோல்' என்ற பதமும், புதிய ஏற்பாட்டில் உள்ள 'ஹேடிஸ்' என்ற பதமும் ஒரே பொருளை உடையது. ''ஹேடிஸ்'' (பாதாளம்) என்பது இருபிரிவுகள் உள்ளது. ஒன்று 'பரதீசு' என்பது. அது 'ஆபிரகாமின் மடி' என்றழைக்கப்படுகிறது. மற்றொன்று 'வேதனை நிறைந்த இடம்' எனப்படும்.

கிறிஸ்துவின் பரமேறுதலுக்கு முன்பு மரித்த இரட்சிக்கப்பட்ட மற்றும் இரட்சிக்கப்படாத எல்லா ஆத்துமாக்களும் சென்ற இடமே 'ஹேடிஸ் – பாதாளம்' என்பதாகும். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் யாவரும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன்பு பாதாளத்தின் ஒருபகுதியாகிய பரதீசுக்கு சென்றனர். இதனை ஆபிரகாமின் மடி என்று கூறப்பட்டுள்ளது (லூக்கா 16:22). இப்பொழுது மரிக்கும் விசுவாசிகள் இங்கு போவதில்லை. அவர்கள் மரித்தவுடன் நேரே கிறிஸ்துவண்டை போகிறார்கள் (2 கொரிந்தியர் 5:8).

### 2. 'ஹேடிஸ்'

பாதாளத்தைக் குறிக்கும் இந்தப்பதம் புதிய ஏற்பாட்டில் நான்கு முறை வருகிறது (மத்தேயு 11:23; 16:18; லூக்கா 10:15; 16:23).

3. பின்வரும் மூன்று இடங்களிலும் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது :

i) கிறிஸ்துவின் அழியாமையைக் குறிக்க (அப்போஸ்தலர் 2:27,31).

ii) இதன் திறவுகோல் கிறிஸ்துவினிடம் உள்ளது (வெளிப்படுத்தல் 1:18).

iii) தன்னிடம் உள்ளவர்களை கடைசி நியாயத்தீர்ப்புக்கென்று இது ஒப்புவிக்கும். பாவிகளோடே இதுவும் அக்கினிக்கடலிலே தள்ளப்படும் (வெளி. 20:13,14).

4. இது இழந்துபோன ஆத்துமாக்களின் நிரந்தரமான இடமல்ல. பாவிகள் நியாயந்தீர்க்கப்பட்டு அக்கினிக்கடலிலே தள்ளப்படும் வரை நியாயத்தீர்ப்பு நாளை எதிர்நோக்கி காத்திருக்கும் இடம் (2 பேதுரு 2:9).
5. லூக்கா 16:19–31 வரையுள்ள பகுதி மூலம் :
   i) இது அக்கினி எரிகிற இடமாகவும், வேதனையுள்ள இடமாகவும் பார்க்கிறோம் (வசனம் 23, 24).
   ii) இந்த இடத்திலிருந்து வேதனைப்படுகிற மக்கள் பரிசுத்தவான்களின் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையினை காணக்கூடியவர் களாக இருப்பார்கள் (வசனம் 23).
   iii) இங்குள்ளவர்கள் சாவை காணமுடியாது (வசனம் 24).
   iv) இந்த இடத்தினின்று தப்பி செல்லமுடியாது (வசனம் 26).
   v) இங்கு வேதனையில் தவித்த ஐசுவரியவான் பார்க்கக்கூடியவனாகவும், வேதனையை உணரக்கூடியவனாகவும், பேசக் கூடியவனாகவும், கேட்கக்கூடியவனாகவும், முந்தின காரியங்களை நினைவுகூரக்கூடியவனாகவும் இருந்தான் (வசனம் 23–31).
6. ஹேடிஸ் என்ற இந்தப் பாதாளத்தில் இரட்சிக்கப்படாத மக்கள் அவர்களுடைய மரணத்துக்கும், அவர்களுக்கு வரவிருக்கும் நித்திய நியாயத்தீர்ப்புக்கும் இடையில் அவர்கள் அனுபவிக்கும் வேதனையை விவரிக்கிறது.

## III. நரகம் என்பது என்ன?

'கெஹன்னா' (Gehenna) என்ற பதம் மெய்யான நரகத்தைக் குறிப்பதாகும். இப்பதம் வேதனையும், அழுகையும் நிறைந்த நரகத்தைக் குறிப்பதோடு ஆக்கினைத்தீர்ப்பின் இடமாகவும் பார்க்கிறோம். இப்பதம் புதிய ஏற்பாட்டில் 12 முறை வருகிறது. இதில் 11 முறை இயேசுகிறிஸ்துவினால் கூறப்பட்டவை. மத்தேயு 5:22, 29, 30, 10:28, 18:9, 23:15, 33; மாற்கு 9:43, 45, 47; லூக்கா 12:5; யாக்கோபு 3:6 இவ்வசனங்களை வாசிக்கவும்.

i) GEE'NNA என்ற கிரேக்கப்பதம் Gehenna என்று உச்சரிக்கப்பட்டுள்ளது. 'இன்னோம்' என்ற மூல பதத்தின் திரிபு இது.

ii) கெஹன்னா என்ற இடம் இன்னோம் பள்ளத்தாக்கில் உள்ளது. முற்காலத்தில் அங்கு நரபலி இடப்பட்டு வந்தது (எரேமியா 7:31). அங்கு வேண்டாதவைகள் தொடர்ந்து சுட்டெரிக்கப்பட்டு வந்தது. பொல்லாத மக்கள்மேல் வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறிக்கும் ஓர் அடையாளமாக யூதர்கள் இதைக் கூறிவந்தனர்.

iii) ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த நரகத்தைப்பற்றி கூறியுள்ளதாவது :

1. பாவிகளின்ஆத்துமாவும், சரீரமும் தள்ளப்படும் இடம் (மத்தேயு 10:28; லூக்கா 12:5).
2. நரகாக்கினையையும், ஆக்கினைத்தீர்ப்பையும் குறிக்கும் இடம் (மத்தேயு 23:33).
3. அங்கே அக்கினி அவியாமலுமிருக்கும் (மாற்கு 9:44). இங்கு கூறப்பட்டுள்ள அவியாத அக்கினி என்பதும் வெளிப்படுத்தல் 19:20, 20:10, 14, 15–ல் கூறப்பட்டுள்ள அக்கினிக்கடல் என்பதும் ஒன்றே.

## IV. அக்கினிக்கடல் என்பது என்ன?

அ. ''அங்கே அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலுமிருக்கும்'' (மாற்கு 9:43–47) என்று இயேசுகிறிஸ்துவானவர் கெஹன்னாவைக் குறிப்பிட்டுள் ளார். இது வெளிப்படுத்தல் 20:14–ல் கூறப்பட்டுள்ள அக்கினிக்கடல் எனலாம். ஆகவே கெஹன்னா எனப்படுவதும், அக்கினிக்கடல் என்பதும் ஒரே இடம்.

**ஆ. நரகம் எனப்படும் அக்கினிக்கடல் :**

1. அவிசுவாசிகளின் முடிவு இது நித்தியமானது.
   i) ஹேடிஸ் (பாதாளம்) மற்றும் அதிலுள்ளவர்களும் ஆயிரம் வருட அரசாட்சியின் பின்பு பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பின்பு அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள் (வெளி. 20:11–15).
   ii) அக்கினிக்கடல் என்பது சதாகாலங்களிலும் எரிந்துகொண்டு இருக்கும். வெளிப்படுத்தல் 14:10, 11, 20:10 இது என்றென்றும் சதாகாலங்களிலும் எரிகிற அக்கினி எனலாம்.

'சதாகாலம்' என்கிற இச்சொல் என்றென்றும் நிற்கும் தேவமகிமையைக் குறிக்கும் சொல். இதுவே சதாகாலமும் இருக்கும் அவரது வல்லமையையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1 பேதுரு 4:11, வெளிப்படுத்தல் 1:6 தேவன் என்றென்றைக்குமுள்ளவர். வெளிப்படுத்தல் 1:18, 4:9, 10 சதாகாலம் என்பது நித்தியம் என்றும், முடிவற்ற காலம் என்றும் பொருள்படும்.

2 தெசலோனிக்கேயர் 1:9,10–ல் பாவிகட்கு நித்திய அழிவாகிய தண்டனை உண்டென அறிகிறோம். 2 பேதுரு 2:17, யூதா 13–ல் கள்ளப்போதகருக்குரிய தண்டனை நித்தியமானது என அறியலாம்.

மேற்கூறிய யாவும் நரகம் உண்டென்று நிச்சயப்படுத்துகிறது. அத்துடன் இறப்புக்குப்பின் ஒன்றும் இல்லை என்பதோ அல்லது ஆத்துமா உறங்கும் என்பதோ அல்லது உத்திரிக்கை ஸ்தலம் உண்டு என்பதோ தவறு என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

2. இது இரண்டாம் மரணம் எனப்படும் (வெளி. 2:11, 20:6, 14, 21:8)

   முதலாம் மரணம் என்பது சரீர மரணம். இரண்டாம் மரணம் என்பது இதற்கு முற்றும் மாறானது. சரீர மரணத்திற்குப் பின்பு பாவிகள் ஹேடிஸ் (பாதாளம்) சென்று, பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்குக் காத்திருப்பார்கள் (வெளிப்படுத்தல் 20:13).

   இரண்டாம் மரணம் எனப்படுவது பாவிகள் தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்படுவது. இதுவே ‘‘பாவங்களில் சாவது’’ (யோவான் 8:21, 24).

<u>குறிப்பு :</u>

நரகம் என்பது ஆத்துமா அழிந்துபோகிறது அல்ல; அல்லது ஆத்தும உறக்கமும் அல்ல (வெளி. 19:20, 20:10). ஆயிரம் வருட அரசாட்சிக்குப் பின்பு மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியும் தள்ளப்படும் இடம் இந்த அக்கினிக்கடலே!

## V. நரகத்தைப் பற்றி ஆண்டவர் இயேசுகிறிஸ்து என்ன கூறியுள்ளார் :

1. முதலாவது நரகம் பிசாசுக்காகவும், அதன் தூதர்களுக்காகவும் உண்டாக்கப்பட்டது (மத்தேயு 25:41). தங்கள் வாழ்க்கையில் பிசாசுக்கு இடம் கொடுத்து பாவத்தில் மரிக்கிற ஜனங்கள் போகிற இடமாகவும் உள்ளது (லூக்கா 16:23). உதாரணமாக பரிசேயரும் (மத்தேயு 23:13), மாயக்காரரும் (மத்தேயு 24:51) பிரவேசிக்கும் இடம்.
2. அவியாத அக்கினி உள்ள இடம் (மாற்கு 9:43; மத்தேயு 5:22, 13:42).
3. பாவிகள் அழுது தங்கள் பற்களைக் கடித்துக்கொண்டிருக்கும் இடம் (மத்தேயு 13:42, 8:12, 22:13, 24:51, 25:30).
4. புறம்பான இருள் நிறைந்த இடம் (மத்தேயு 25:30, 8:12)

<u>குறிப்பு :</u>

பாவிகள் ஏற்கனவே இருளில் வாழ்கிறார்கள் (எபேசியர் 5:8; அப்போஸ்தலர் 26:18). இருளின் அதிகாரத்திலிருக்கிறார்கள் (கொலோசெயர் 1:13). புறம்பான இருள் என்பது இரண்டாம் மரணம். அதாவது நித்தியகாலமாக ஒரு பாவி ஒளியின் சத்தியத்திலிருந்தும், ஒளியாகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலிருந்தும், அவருடைய சுவிசேஷமாகிய ஒளியினிடத்திலிருந்தும் பிரிக்கப்பட்ட நிலையாக உள்ளது. அங்கே பகல் இருப்பதில்லை.

5. நரகம் என்பது நியாயத்தீர்ப்பும், நித்தியமான தண்டனையும் உள்ள இடமாகும் (மத்தேயு 23:33, 25:46). இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புறக்கணித்து மனந்திரும்பத் தவறிவிடுபவர்களுக்குக் கிடைக்கும் நியாயமான தண்டனையே நரகம் ஆகும்.
6. அது நிலையான ஒரு இடமாகும் (லூக்கா 16:26). நித்தியமானது (மத்தேயு 25:41,46). அதிலிருந்து வெளியே செல்லவோ, விடுதலையடையவோ முடியாது. அதற்கு ஒரு மாற்றமும் கிடையாது (லூக்கா 16:26; மத்தேயு 23:33).

<u>குறிப்பு :</u>

ஆத்துமா அழிந்துபோகுதல், ஆத்துமா தூங்குதல் அல்லது இறந்தபின் ஆத்துமா கழுவப்படுதற்கு வாய்ப்புண்டு என்று கூறப்படும் கூற்றுகள் ஒன்றுமில்லாமற்போகின்றது.

7. அது புழு சாகாமல் இருக்கும் இடம் (மாற்கு 9:44). முன்நடந்த (பூலோகத்தில்) காரியங்களை நினைத்துப் பார்க்கக்கூடிய சக்தி உள்ள இடமாயிருக்கும் (லூக்கா 16:25). மேலும் பாவிகள் முடிவில்லாத வேதனையின் மத்தியிலும், தங்கள் முழு உணர்வோடு இருக்கும் இடமாகவும் நரகம் இருக்கும் (லூக்கா 16:19–31).
8. நரகமானது ஐக்கியமில்லாத, உறவு இல்லாத, விடுதலை இல்லாத, மறக்கமுடியாத, பாக்கியமில்லாத, நம்பிக்கை இல்லாத, மன்னிப்புப் பெறமுடியாத ஒரு இடமாகும். (இந்த சிந்தனைகள் லூக்கா 16:19–31–ல் உள்ள சம்பவத்திலிருந்து எடுக்கப்பட்டவை).

<u>குறிப்பு :</u>

இந்தக் கருத்துக்கள், கடுமையானதாகத் தோன்றினால் ஒன்றை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். அதாவது இதன் உண்மை இங்கு சொல்லப்பட்டவைகளைக் காட்டிலும் மிகவும் கடுமையானதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## VI. உண்மையான நரகத்தின் போதனைகளுக்கு எதிரான விவாதங்கள் :

**விவாதம் 1 :** நெருப்பு அணைந்துபோகும்.

**பதில் :**

நரகமானது பிரத்தியேகமான நெருப்பு நிறைந்த இடமாகும். அவியாத அக்கினி உள்ள இடம். நித்திய அக்கினி உள்ள இடம் என்று வேதம் கூறுகிறது (மத்தேயு 3:12; 18:8, 25:41 லூக்கா 3:17; மாற்கு 9:43–48)

**விவாதம் 2 :** நரகம் தேவனுடைய அன்புடன் இணைந்து ஒப்பிடத்தக்கதல்ல.

**பதில் :**

உண்மையாகவே தேவன் பாவியை நேசிக்கிறார். பாவத்தை வெறுக்கிறார். அன்பும் நீதியும் உள்ள தேவன் மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் எதிர்பார்க்கிறார் என்பதை உலகமானது உறுதியாக மறுக்கிறதாகத் தெரிகிறது. தேவனிடத்தில் பட்சபாதமில்லை. எல்லா மனுஷரையும் ஒன்றுபோல காண்கிறார் என்று மனிதன் தெரிந்துகொள்ள வேண்டும் (ரோமர் 11:32, 2:11, 12. அன்பைப்பற்றி அதிகமாகக் கூறிய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நரகத்தைப்பற்றியும் அதிகமாகக் கூறியுள்ளார். தேவனுடைய நீதி நிறைவேறுமட்டும் தேவன் பாவியினிடத்தில் தன் கிருபையையும், இரக்கத்தையும் காட்ட முடியாது என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

**விவாதம் : 3** மரணத்திற்குப் பின் பாவமன்னிப்பு.

**பதில் :**

பாவி தப்பித்துக்கொள்ளும்படியான யாதொரு தற்காலிக காரியத்தையோ அல்லது இடையிலுள்ள ஒரு இடத்தையோ தேவன் அனுமதிக்கவில்லை. பாதாளத்திலுள்ள அனைவரும் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவார்கள் (வெளி. 20:13).

**விவாதம் : 4** ஆவி இளைப்பாறுதல், ஆத்துமா அழிந்துபோகுதல்.

**பதில் :**

இவற்றைப்பற்றி தகுதியானபடி ஏற்கனவே பதில் கொடுக்கப்பட்டுள்ளது. நரகம் என்பது ஒரு தண்டனையாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (மத்தேயு 25:46). உயிரற்ற அல்லது உணர்ச்சியற்ற ஒரு மனிதனைத் தண்டிக்கமுடியாது. மேலும் ஆத்துமா இல்லாமல் அழிந்துபோகுமானால் ஒரு அவிசுவாசியை உயிரோடு எழுப்பிக் கொண்டுவருவதும் அவசியம் இல்லை (யோவான் 5:29).

**விவாதம் : 5** சுவிசேஷத்தைக் கேட்காதவர்களுக்கு நரக தண்டனை இல்லை.

**பதில் :**

தேவன் அவர்களுக்குக் கொடுத்த வெளிச்சத்திற்குத் தக்கதாக தேவன் அவர்களை நியாயந்தீர்ப்பார் என்பதை மனதில் கொள்ளவேண்டும் (ரோமர் 1:19, 20).

## VII. எழுத்தின்படியுள்ள நரகத்தைப்பற்றிய நியாயங்கள் :

1. பாவத்திற்குரிய தீர்ப்பு, நீதிக்குரிய பலன் இவ்விரண்டும் கேள்வி கேட்பதற்குரியதல்ல. ஆனால் இவை இரண்டும் மாறாத சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகவே உள்ளன என்று வில்லியம் இவான்ஸ் என்பவர் கூறியுள்ளார்.
2. நரகம் ஒன்று இல்லையென்றால் இயேசுகிறிஸ்து ஒரு பொய்க்காரராகவே எண்ணப்படுவார். அவருடைய தெய்வீகமும், அதிகாரமும் மறுக்கப்படக் கூடியதாகும்.
3. நரகம் இல்லையென்றால் தேவன் இயேசுகிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பி நமக்காக மரிக்கும்படி செய்தது (மறுமையில் இல்லாத ஒரு இடத்திலிருந்து நம்மைத் தப்புவிக்கும்படியாக) ஒரு மூடத்தனமான காரியமாகும்.
4. நரகம் இல்லையென்றால் வேதாகமம் பொய்யானதாகும்.
5. பாவம் என்பது உண்மையானால் நரகமும் உண்டு என்பது உறுதி. வேண்டுமென்றே இதை மனுஷன் மறுக்கலாம். பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). நரகம் என்பது இரண்டாம் மரணம் ஆகும் (வெளி. 20:13,14). பாவிகள் முடிவில் செல்லும் இடம் நரகமே (வெளிப்படுத்தல் 21:8).
6. மனிதன் நித்தியமானவனானால் நரகம் இருப்பது நிச்சயம். மனிதன் அழியாத ஒரு ஆத்துமா (ஆதியாகமம் 2:7). ஒவ்வொருவரும் எங்கேயாவது ஒரு இடத்தில் நித்தியமாக வாழுவோம் (மத்தேயு 25:46; யோவான் 5:28, 29). பரலோகத்தை விரும்பாத அனைவருக்கும் நரகம் கிடைப்பது நிச்சயம்.

7. தேவன் நீதியுள்ளவராய் இருப்பாரானால் நரகம் நிச்சயம் உண்டு (வெளி. 15:3). தேவன் நீதியுள்ளவராக இருப்பாரானால் பாவியை நியாயத்திற்குக் கொண்டு வருவார் (ரோமர் 14:12; எபிரெயர் 9:27; அப்போஸ்தலர் 17:30,31). பாவிகள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (சங்கீதம் 9:17; 2 பேதுரு 2:9; மத்தேயு 13:40–42 முதலியவை).

**முடிவுரை :**

இந்தப் பாடத்திலுள்ள உண்மையை அறிந்த நாம் அனைவரும் தேவனுடைய இரட்சிக்கும் கிருபையை உணர்ந்து நம்முடைய முழங்காலில் நம்மை நிற்கும்படிச் செய்கிறது. நாம் ஒருவருமே பரலோகத்திற்குத் தகுதி உள்ளவர்கள் அல்ல. தேவனுடைய அன்பின் இரக்கத்தினால் மீட்கப்பட்ட பாவிகளாக மாத்திரமே நாம் இருக்கிறோம். இழக்கப்பட்டுப்போன பாவிகளைக் குறித்த அன்பினாலே உங்கள் உள்ளங்கள் விழித்தெழும்பத்தக்கதாக இப்பாடமானது கருத்துடனும், ஜெபத்துடனும் தயாரிக்கப்பட்டுள்ளது. நாம் முழுவதுமாக இதைப் புரிந்துகொள்ளுகிறோமோ, இல்லையோ நரகமானது உண்மையாகவே இருக்கிறது. கடந்துபோகிற இந்த வாழ்க்கையில் வரப்போகிற இந்த தேவ கோபத்தைப்பற்றி தேவனை அறியாதவர்களை அன்புடன் எச்சரிப்பதற்கு ஜாக்கிரதையாக இருப்போமாக.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்கும் முன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# நரகம்

ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி

இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.

(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)

**சரியான விடையை வட்டமிட்டு ◯ காட்டவும்**

1. நரகத்தைக் குறித்ததான பாடம் முக்கியம், காரணம் :
   a. தேவன் ஒருவரையும் அங்கு அனுப்ப மாட்டார்
   b. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத நபர் மரிக்கும்பொழுது அங்கு செல்வார்
   c. நரகம் ஒரு உண்மையான இடம் இல்லை
2. ‘‘சீயோல்’’ என்கிற வார்த்தையின் பொருள் என்ன ?
   a. பாதாளம்
   b. தேவன் கீழ்ப்படியாமல் போன தேவதூதர்களைப் போடும் இடமாகும்
   c. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரைக்கும் மரிக்கும் ஆத்துமாக்கள் தங்கும் இடமாகும்
3. ‘ஹேடிஸ்’ என்ற வார்த்தையின் பொருள் என்ன ?
   a. இரட்சிக்கப்படாத ஆத்துமாக்கள் நியாயத்தீர்ப்பு நாளை எதிர்நோக்கி காத்திருக்கும் இடம்
   b. தேவன் கீழ்ப்படியாமல்போன தேவதூதர்களைப் போடும் இடமாகும்
   c. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரைக்கும் மரிக்கும் ஆத்துமாக்கள் தங்கும் இடமாகும்
4. ‘டார்டராஸ்’ என்ற வார்த்தையின் பொருள் என்ன ?
   a. பாதாளம்
   b. தேவன் கீழ்ப்படியாமல்போன தேவதூதர்களைப் போடும் இடமாகும்
   c. முடிவில்லாத நியாயத்தீர்ப்பின் இடமாகும்
5. ‘கெஹன்னா’ என்ற வார்த்தையின் பொருள் என்ன ?
   a. கீழ்ப்படியாமல்போன தேவதூதர்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டு இருக்கும் இடமாகும்
   b. மெய்யான நரகம்
   c. கிறிஸ்து வரும் வரைக்கும் மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் தங்கியிருக்கும் இடமாகும்
6. பழைய ஏற்பாட்டில் ‘சீயோல்’ என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது, காரணம் :
   a. நரகத்தைத் தெளிவாக விவரிக்கும் வார்த்தையாகும்
   b. வாழ்க்கையின் முடிவாகும்
   c. இந்த இடத்தை நோக்கி மனிதனின் வாழ்க்கை தொடர்கிறது
7. ‘சீயோல்’ வேதனை நிறைந்த ஒரு உண்மையான இடம் என்பதைக் காண்பிக்கும் வசனத்தைக் குறிக்கவும்.
   a. மத்தேயு 11:2
   b. சங்கீதம் 116:3
   c. வெளி. 1:18

**8.** ஹேடிஸ்ஸில் எத்தனைப் பகுதிகள் உண்டு **?**

a. ஒன்று

b. நான்கு

c. இரண்டு

**9.** ஹேடிஸ்ஸில் துன்மார்க்கர் தங்கியிருக்கும் பகுதி எப்பொழுது காலியாகும் **?**

a. எடுத்துக்கொள்ளப்படுதல்

b. உபத்திரவக்காலம்

c. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

**10.** ஹேடிஸ்ஸின் (பாதாளத்தின்) திறவுகோலை உடையது யார் **?**

a. சாத்தான்

b. கிறிஸ்து

c. பரிசுத்த ஆவியானவர்

**11.** கெஹன்னாவைப் போன்ற மற்றொரு இடம் எது **?**

a. ஹேடிஸ்

b. அக்கினிக் கடல்

c. டார்டராஸ்

**12.** இரண்டாம் மரணம் எனப்படுவது எது **?**

a. மக்கள் இரண்டு முறை மரிக்கின்றனர்

b. பாவிகள் தேவனிடமிருந்து நித்தியமாக பிரிக்கப்படுவது

c. கெஹன்னாவிலிருந்து ஒரு நபர் பரலோகம் செல்லும் நேரமாகும்

**13.** கெஹன்னாவை (நரகத்தை) யாருக்காகத் தேவன் ஆயத்தப்படுத்தியிருக்கிறார் **?**

a. அவிசுவாசிகள்

b. மிகவும் மோசமான பாவிகள்

c. சாத்தான், அவனின் தூதர்கள்

**14. பொருத்துக :–** சரியான வாக்கியத்திற்கு முன்பு வசனத்தை எழுதவும்.

| | | |
|---|---|---|
| ---------------- | அக்கினி அவிந்துபோகாது | a. மத்தேயு **13:42** |
| ---------------- | இருளான இடமாகும் | b. மத்தேயு **23:33** |
| ---------------- | நியாயத்தீர்ப்பின் இடமாகும் | c. மாற்கு **9:43** |
| ---------------- | அழுகையும் பற்கடிப்புமான இடம் | d. மத்தேயு **25:30** |

15. லூக்கா **16:19–31**, வசனங்களிலிருந்து ஹேடிஸ்ஸைக் குறித்து (பாதாளம்) நாம் கற்றுக் கொள்ளும் **மூன்று** காரியங்கள் என்ன ?

a. ---------------------------------------------------------------------------

b. ---------------------------------------------------------------------------

c. ---------------------------------------------------------------------------

16. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உண்மையான நரகத்தின் போதனைக்களுக்கு எதிரான 2 விவாதங்களுக்கு பதில் கூறுக.

a. **விவாதம் 1 :** நரகம் தேவனுடைய அன்புடன் இணைந்து ஒப்பிடத்தக்கதல்ல

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

b. **விவாதம் 2 :** ஆவி இளைப்பாறுதல், ஆத்துமா அழிந்துபோகுதல்

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ________________________________________________

**முகவரி :** ________________________________________________

________________________________________________